# வன்முறை பாதுகாப்பு சட்டம் பற்றிய தகவல்கள் (GSG)

## பாதுகாப்பு

### 1. குடும்ப வன்முறைச்சட்டத்தின் மூலம் யார் பாதுகாக்கப்பட்டுள்ளனர்?

இச்சட்டமானது வன்முறையினால் துன்பம் அனுபவிக்கும் ஒருவரை அல்லது திருமணத்தின் மூலமாக அல்லது சேர்ந்து வசிக்கும் இருவரிற்கிடையே ஏற்பட்ட வன்முறைச் செயலினால் துன்பப்பட்ட அச்சுறுத்தப்பட்ட நிலையில் இருக்கும் ஒரு நபரை பாதுகாக்கின்றது. துன்பத்தினை அனுபவிக்கும் நபரும் மற்றைய நபரும் ஒன்றாக வசித்தாலோ அல்லது ஏற்கனவே ஒரே வீட்டில் வசித்தவர்களாக இருந்தாலோ அல்லது இவ்விருவருக்கும் இடையேயான உறவுமுறை முறிவடைந்திருந்தாலோ பரவாயில்லை. இச்சட்டமானது (முன்னாள்) வாழ்க்கைத் துணையினால் பின் தொடருதல், தொல்லைகளை மேற்கொள்ளல், அல்லது மறைந்திருந்து தாக்குதல் போன்ற துன்பங்களை அனுபவிப்பவரையும் பாதுகாக்கின்றது. மேலும் பிள்ளைகளினால் அல்லது இளம் வயதினரால் தங்களுடைய சகோதரிகளுக்கு எதிராக அல்லது பெற்றோருக்கு எதிராக வன்முறை அச்சுறுத்தல்களை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களிலும் பாவிக்கப்படுகின்றது.

## பாதுகாப்பு நடவடிக்கைகள்
## (வெளியேற்றுதல், உட்பிரவேசித்தல் தடை தொடர்புகொள்ளல் தடை)

### 2. சட்டமானது எவ்வாறு பாதுகாக்கின்றது?

ஆபத்திற்குள்ளான நபரை பாதுகாப்பதற்காக காவல்துறையினர் விசேட நடவடிக்கைகளை எடுக்கலாம் (பாதுகாப்பு நடவடிக்கைகள்) ஆபத்தினை விளைவிக்கும் நபரை 14 நாட்களுக்கு வதிவிடத்திலிருந்தோ அல்லது வீட்டிலிருந்தோ வெளியேற்ற முடியும். (வெளியேற்றல், வினா 10 ff ஐ பார்க்க). மேலும்/அல்லது அந்நபரை ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தினுள் பிரவேசித்தல் தடைசெய்யலாம். (உட்பிரவேசித்தல் தடை வினா 14ஐ பார்க்க்) மேலும்/அல்லது சில குறிப்பிட்ட நபருடன் தொடர்பு ஏற்படுத்துவதை தடைசெய்யலாம். (தொடர்பு ஏற்படுத்துதல் தடை, வினா 15ஐ பார்க்க). மேலும் ஆபத்தை விளைவிக்கும் நபர் ஆகக்கூடியது 24 மணித்தியாலங்கள் காவல்துறையினரின் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கமுடியும் (தடுப்புக்காவல் வினா 37ஐ பார்க்க).

### 3. பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நோக்கங்கள் என்ன?

இவை கடுமையான வன்முறை நிலைமையை தடுப்பதும் துன்புறுபவரைப் பாதுகாப்பதுமேயாகும். இதன் மூலம் சூழ்நிலையில் அமைதி ஏற்படும். சம்பந்தப்பட்டவர்கள் அமைதியாக சிந்தித்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுப்பதற்கும், தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் வழிவகுக்கும்.

### 4. எங்கே சட்டம் பயன்படுத்தப்படுகின்றது?

இச்சட்டமானது சூரிச் மாவட்டத்தில் பயன்படுத்தப்படுகின்றது. இது சூரிச் மாவட்டத்தில் வசிக்கும் அல்லது தொழில்புரியும் குடும்பவன்முறையால் துன்பப்படுபவோரை பாதுகாப்பதற்கு அல்லது குற்றச்செயல்கள் சூரிச் மாவட்டத்தில் நடைபெற்றிருந்தால் பயன்படுத்தலாம். இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் "ஆபத்தினை விளைவிக்கும்" அனைத்து நபர்களின்மீதும் அவர்களின் வதிவிடத்தை கருத்தில்கொள்ளாது பயன்படுத்தப்படும். மற்றைய மாவட்டங்களில் இதையொத்த சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
(பார்க்க www.against-violence.ch)

## 5. குடும்பவன்முறையினால் நீங்கள் பாதிக்கப்பட்டிருப்பின் உங்களால் என்ன செய்யமுடியும் ?

ஆலோசனை கூறுகின்றதொரு அலுவலகத்தினை அல்லது மகளீர் பாதுகாப்பகத்தினை தொடர்புகொள்ளவும். தீவிர ஆபத்தான நிலைமையில், நீங்கள் நேரடியாகவே காவல்துறையினரை அழைத்து அவர்களிடம் பாதுகாப்பு உதவி கேட்கமுடியும். **அவசர அழைப்பு 117**

## 6. காவல்துறையினரின் நடைமுறை என்ன?

காவல்துறையினர் உதவுவதுடன், நிலைமையினை விசாரணை செய்வர். அவர்களால் வன்முறை அச்சுறுத்தல்களை மேற்கொண்டவருக்கு அல்லது தொந்தரவு செய்யும் ஒருவருக்கு 14 நாட்களுக்கு வதிவிடத்திற்குள், வீட்டிற்குள், சுற்றுச்சூழலுக்குள் இருந்து வெளியேற்றமுடியும். ஆபத்திற்குள்ளான நபருக்கு பாதுகாப்புத் தேவைப்படின், காவல்துறையினரால் ஆபத்தினை விளைவிக்கும் நபரை தங்குமிடத்திற்கு அல்லது சில குறிப்பிட்ட வீதிகளுக்குள் பிரவேசிப்பதை தடுத்துநிறுத்த முடியும். (உதாரணம்:- தொழில்புரியும் இடம்) அல்லது ஆபத்திற்குள்ளான நபருடன் அல்லது வேறு குறிப்பிட்ட நபர்களுடன் தொலைபேசி, SMS, கடிதம் ஊடகவோ தொடர்புகளை மேற்கொள்வதைத் தடுத்துநிறுத்த முடியும்.

## 7. காவல்துறையினரால் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று யார் தெரிந்துகொள்வார்கள்?

ஆபத்தினை விளைவித்த நபருக்கு காவல்துறையினரால் பாதுகாப்பு நடவடிக்கைகள்பற்றிய எழுத்துமூலமான கட்டளை கிடைக்கும். அத்துடன் ஆபத்திற்குள்ளான நபரும், அதேபோன்று பொறுப்பு வாய்ந்த குற்றவாளியும், ஆலோசனை அலுவலகமும் ஒரு கட்டளையின் பிரதியினை பெற்றுக்கொள்வர். அவ்வீட்டில் பிள்ளைகளும் வசிப்பார்களேயானால் பாதுகாவலர் அதிகாரிக்கும் அறிவிக்கப்படும்.

## 8. நீங்கள் ஒரு மூன்றாம் நபராக குடும்பவன்முறை பற்றி அறிந்தால் உங்களால் என்ன செய்ய முடியும்.?

நீங்கள் ஒரு ஆலோசனை நிலையத்தினை அல்லது காவல்துறையினரை தொடர்புகொள்ளமுடியும். ஆனால் நீங்கள் அவ்வாறு செய்யவேண்டிய கடமை இல்லை. சிறுவர்கள் ஆபத்துக்கு உள்ளாவார்களேயானால், ஆசிரியர்களுக்கு தங்களுடைய மேலதிகாரிகளுக்கு அறிவிக்கும் கடமையுள்ளது.

## 9. ஆபத்தினை விளைவிக்கும் நபருக்கு எதிராக வழங்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கை ஆபத்திற்குள்ளான நபரின் விருப்பத்தில் தங்கியிருக்குமா?

இல்லை. ஒருவர் உடல்ரீதியாகவோ, பாலியல்ரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ காயப்படுத்தப்பட்டு அல்லது அச்சுறுத்தல் வன்முறையினால் துன்புறுத்தப்பட்டு அல்லது கொடுமைப்படுத்தப்பட்டிருந்தால் காவல்துறையினர் ஆபத்திற்குள்ளான நபரின் விருப்பத்தில் தங்கியிராது பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 10. வதிவிடத்தின் உரிமையாளர் அல்லது வாடகையுரிமையாளர் என்பது செல்வாக்கு செலுத்துமா?

இல்லை. காவல்துறையினரால் வதிவிடத்தின் உரிமைலயளரையோ அல்லது வாடகையுரிமையாளரையோ வெளியேற்றமுடியும்.

## 11. வெளியேற்றப்பட்ட நபரின் வீட்டுத் திறப்புகளுக்கும், அனுப்பப்படும் அலுவலகக் கடிதங்களுக்கும் என்ன நடைபெறும்?

வெளியேற்றப்பட்ட நபர் வதிவிடத்தின் அல்லது வீட்டின் அனைத்துத் திறப்புகளையும் கையளித்தல் வேண்டும். மேலும் அவர் தான் வெளியேற்றப்பட்ட காலத்திற்குள் அலுவலக கடிதங்களை அனுப்புவதற்காக ஒரு முகவரியை காவல்துறையினருக்கு தெரிவிக்க வேண்டும். வெளியேற்றப்பட்ட நபர் முகவரியை தெரிவிக்காதவிடத்து அலுவலக கடிதங்கள் காவல்துறையினருக்கு அனுப்பப்பட்டு அவை ஒப்படைக்கப்பட்டதாக கருதப்படும்.

## 12. வெளியேற்றப்பட்ட நபர் தன்னுடன் எடுத்துச் செல்லக்கூடியவை எவை?

வெளியேற்றப்பட்ட நபர் அத்தியாவசியமான பாவனைப்பொருட்களை மாத்திரமே தன்னுடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும். (உதாரணமாக: சொந்த ஆவணங்கள், உடைகள், அடையாளஅட்டைகள், மருந்துகள், கைத்தொலைபேசி மேலும்..) வெளியேற்றப்பட்ட காலவரையறையினுள் அடிப்படை குடும்பச்செலவுகள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பாராமரிப்பு பொறுப்பில் உள்ள நபர் பணம் அல்லது வங்கி அட்டைகளை வைத்துவிட்டுப் போகவேண்டிய கடமையுள்ளது. அவ்வாறு இல்லையெனில் நேரடியாக குடிசார் நீதிமன்றில் வாழ்க்கைச்செலவிற்காக வழக்குப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

## 13. வெளியேற்றப்படுதல் எவ்வகையான பகுதிகளில் செல்லுபடியாகும்?

இந்நடவடிக்கைகள் வதிவிடம்/வீடு, அத்துடன் நேரடியான சுற்றுச்சூழல்களில் செல்லுபடியாகும். இதனுள் உள்ளடக்கப்படுபவை உதாரணமாக நடைகூடம்(கொறிடோர்) மாடிப்படிப்பகுதிகள், நிலக்கீழ்அறை, கழுவும்அறை, முற்றம், தோட்டம், வாகனத்தரிப்பிடம், வாகனநுழைவாயில், நுழைவாயில் என்பன ஆகும்.

## 14. உட்பிரவேசித்தல்தடை எவ்வகையான பகுதிகளில் செல்லுபடியாகும்?

காவல்துறையினரால் உட்பிரவேசித்தல் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பின் உட்பிரவேசித்தலோ அல்லது வாகனத்தில் பயணிப்பதோ பாதுகாப்பு நடவடிக்கையில் தெளிவாக குறித்துக் காட்டப்படும். ஒரு பிரதேசத்தினுள் நுழைவதற்கான தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டால் அனைத்து வீதிகளும் குடியிருப்பு என விரிவுபடுத்தப்படலாம். உதாரணம்: தொழில்புரியும் இடம் அல்லது பாடசாலைக்குச் செல்லும் பாதை என்பன பாதுகாக்கப்படுதல் அவசியமாகும்.

## 15. தொடர்புகொள்ளல் தடை என்றால் என்ன?

தொடர்புகொள்ளல் தடையென்றால் ஆபத்தினை விளைவிக்கும் நபர் ஆபத்திற்குள்ளான நபருடன் ஏதாவது ஒருமுறையில் தொடர்புகளைமேற்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். இதனுள் நேரடியாகக் கதைத்தல், தொலைபேசி அழைப்புகள், SMS, மின்னஞ்சல், கடிதங்கள் என்பன அடங்கும். அவசியமாயின் இந்நடவடிக்கையானது மற்றைய நபர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.
(உதாரணமாக பிள்ளைகள், நெருக்கமானவர்கள்).

## 16. வன்முறையான சிறுவர்கள் அல்லது இளம் நபர்பளுக்கு என்ன நடக்கும்?

அடிப்படையாக பாதுகாப்பு நடவடிக்கையானது சிறுவர்களுக்கு அல்லது இளம் நபர்களுக்கு எதிராகவும் மேற்கொள்ள முடியும்.

## 17. பாதுபகாப்பு நடவடிக்கையானது போதுமான பாதுகாப்பினை வழங்காவிடின் என்ன செய்யமுடியும்?

ஒரு ஆபத்திற்குள்ளான பெண் தனது பிள்ளைகளுடன், முன்னரே தொலைபேசியினூடாக தற்காலிகமாக பெண்கள் காப்பகத்தில் தஞ்சம் கோரமுடியும். சிறுவர்களுக்கும் இளம் நபர்களுக்கும் விசேடமன சிறுவர் பாதுகாப்பு நியைங்கள் இருக்கின்றன (தொலைபேசி இலக்கங்களை இணைப்பில் பார்க்கவும்). தேவையாயின் காவல்துறையினர் உதவிவழங்குவர்.

## 18. காவல்துறையினரின் பாதுகாப்பு நடவடிக்கை மட்டும் ஒரு ஆபத்திற்குள்ளான நபரைப் பாதுகாக்க முடியுமா ?

ஒரு தீவிரமான அபாயகரமான நிலைமையில் காவல்துறையினருக்குமட்டுமே ஆபத்தினை விளைவிக்கும் நபருக்கு எதிராக கட்டாயமான நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் உள்ளது. ஆபத்தானது கடுமையாக இல்லாதவிடத்து வேறுபட்ட சட்டங்கள், சமுதாய மேலும்/அல்லது வேறு சிகிச்சை நடவடிக்கைகள் செயற்படுத்தலாம். நீங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கான பிரத்தியேக ஆலோசனை நிலையத்தினை அல்லது வழக்கறிஞரை தொடர்புகொள்ளவும்.

## 19. திருமணம்மூலமாகவோ அல்லது பதிவுசெய்யப்பட்ட துணையின்மூலமாகவோ சுவிற்சர்லாந்தில் வதிவிட உரிமையை பெற்றிருந்த ஒருவரிடம் பாதுகாப்பு நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டால் அவர் சுவிற்சர்லாந்தில் வதிவிட உரிமையை இழப்பாரா?

பாதுகாப்பு நடவடிக்கைக்கு மட்டும் வதிவிட உரிமையில் விளைவுகளை ஏற்படுத்தும் திறன் இல்லை. எனினும் பின்பு பிரிதல், விவாகரத்து அல்லது கலைந்து செல்லல் போன்ற நிலைமை ஏற்படும்போது குறுகியகால திருமணம் அல்லது பதிவுசெய்யப்பட்ட துணையாயின் மட்டுமே சுவிற்சர்லாந்தில் வதிவிட உரிமை இழக்க நேரிடும்.

## 20. குடும்ப வன்முறைபற்றி தாமதமாக காவல்துறையினருக்கு அறிவிக்கப்பட்டால் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியுமா?

ஆம். ஆபத்திற்குள்ளான நபர் தாமதமாக காவல்துறையினருடன் தொர்புகொண்டாலும் ஒரு பாதுகாப்பு நடவடிக்கையானது மேற்கொள்ளப்படலாம். முன்போல் இன்னும் வன்முறைபற்றி பயப்படுகின்றேன் அல்லது அச்சுறுத்தப்படுகின்றேன் அல்லது ஆபத்தினை விளைவித்த நபரினால் பின்தொடரப்படுகின்றேன் என்று கருதப்படுமிடத்து.

## 21 பாதுகாப்பு நடவடிக்கைக்கு எவ்வளவு செலவாகும்?

காவல்துறையினரால் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கையானது இலவசமானது.

## 22 நிலைமை அமைதியடைந்தபின்பு வெளியேற்றப்பட்ட நபர் மீண்டும் திரும்ப முடியுமா?

இல்லை. வெளியேற்றப்பட்ட 14 நாட்களுக்குள் (அல்லது நீடித்த காலப்பகுதி) வெளியேற்றப்பட்டநபர் மீண்டும் திருமபுவதற்கும் அனுமதியில்லை. ஆயினும் வெளியேற்றப்பட்ட நபரை ஆபத்திற்குள்ளான நபர் சுயவிருப்புடன் வதிவிடத்தினுள்/வீட்டினுள் அனுமதித்தாலும், தண்டனைக்குரியதாகும். வெளியேற்றப்பட்ட நபருக்கு மிக அவசரமாக வதிவிடத்தினுள் இருந்து ஏதாவது எடுக்க வேண்டுமாயின் காவல்துறையினரின் வழித்துணையுடன் மட்டும் செல்ல அனுமதிக்கப்படும்.

## 23 ஆபத்தினை விளைவிக்கும் நபர் தடுப்புக்காவலில் இருக்கும்போதும் பாதுகாப்பு நடவடிக்கையினை பயன்படுத்த முடியுமா?

ஆம். ஆபத்தினை விளைவிக்கும் நபர் தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்புகூட அந்நபரினால் பாதுகாப்பு நடவடிக்கையானது மதிக்கப்படல் வேண்டும். அதாவது வெளியேற்றப்பட்ட நபர் பாதுகாப்பு நடவடிக்கைக்கான காலப்பகுதி முடியமுன்பு மீண்டும் வீட்டிற்குச் செல்வதையோ அல்லது உட்பிரவேசித்தல் தடையையோ அல்லது தொடர்புகளை ஏற்படுத்துதல் தடையையோ மீறுதலாகாது.

## 24 காவல்துறையினரது பாதுகாப்பு நடவடிக்கைக்கு எதிர் மனு தாக்கல்செய்ய முடியுமா?

பாதுகாப்பு நடவடிக்கையினை பெற்றுக்கொண்ட பின்பு ஆபத்தினை விளைவிக்கும் நபர் 5நாட்கள் காலதாமத்தில் எதிர்த்து மனு தாக்கல்செய்யலாம். பொறுப்பு வாய்ந்த நீதிபதியினால் 4 வேலை நாட்களுக்குள் பாதுகாப்பு நடவடிக்கையினை மாற்றமின்றி வைத்திருப்பதா, மாற்றம் செய்வதா அல்லது நீக்குவதா என முடிவு செய்வார். தீர்ப்பு வழங்கப்படும்வரை பாதுகாப்பு நடவடிக்கையானது செல்லுபடியானதாகும். பாதுகாப்பு நடவடிக்கையில் மாற்றம் ஏற்படாதவிடத்து வழக்குச்செலவினை ஆபத்தினை விளைவித்த நபர் செலுத்த வேண்டும். சரியான நேரத்தினுள் நீதிபதியின் முடிவு ஆபத்தினை விளைவித்த நபருக்கு அறிவிக்கப்படும்.

## 25. வெளியேற்றம் அல்லது உட்பிரவேசித்தல் - தொடர்புகொள்ளல் தடையை பின்பற்றாத பட்சத்தில் ஆபத்திற்குள்ளான நபர் என்ன செய்யமுடியும்?

ஆபத்திற்குள்ளான நபர் காவல்துறையினரை (அவசர அழைப்பு 117) அழைக்கமுடியும். பாதுகாப்பு நடவடிக்கையினை பின்பற்றாவிடின் அது தண்டனைக்குரியதாகும். அத்தடன் காவல்தறையினரால் அந்நபரை 24 மணித்தியாலாங்களுக்கு தடுப்புக்காவலில் வைக்கமுடியும். வீட்டின் அமைதியை குலைக்கும் பட்சத்தில் ஆபத்திற்குள்ளான நபரால் ஒரு குற்றவியல் வழக்கும் தொடரமுடியும். பாதுகாப்பு நடவடிக்கையை அலட்சியம் செய்யும் பட்சத்தில் பாதுகாப்பு நடவடிக்கை நீடிப்பிற்கான காரணமாக அமையலாம் (வினா 37 ஐ பார்க்க).

## 26. ஆபத்திற்குள்ளான நபரிற்கு ஆலோசனைகள் வழங்கப்புடுமா?

ஆம். ஆபத்திற்குள்ளான நபருடன் மிகவிரைவில், பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 3 நாட்களின் பின் துன்புறுவோருக்கான ஆலோசனை நிலையம் தொடர்பினை ஏற்படுத்தும். ஆலோசனை தேவைப்படுமிடத்து மேலும் நிபுணருடன் சோந்து மேலதிகமாக என்ன நடவடிக்கை தேவை என ஆராயப்படும். இயன்றவரையில் உரையாடல்கள் ஒரு மொழிபெயர்ப்பாளரின் துணையுடன் துன்புறுபவரின் தாய்மொழியிலேயே நடாத்தப்படும். ஆலோசனைகள் இலவசமாக வழங்கப்படும்.

## 27. ஆபத்தினை விளைவிக்கும் நபருடனும் தொடர்பு ஏற்படுத்தப்படுமா?

ஆம். ஆபத்தினை விளைவிக்கும் நபருடனும் தொடர்பு ஏற்படுத்தப்படும். நிபுணருடன் சேர்ந்து பிரத்தியேக சிகிச்சைகளுடன் அல்லது செயல்த்திட்டங்களுடன் வன்முறையான நடத்தைகளை எதிர்காலத்தில் தவிர்த்துக்கொள்வதற்கும், முரண்பாடுகளை வன்முறையற்று கையாள்வதற்கும் கற்றுக்கொள்ளலாம். இந்த ஆலோசனை இலவசமாக வழங்கப்படும்.

ஆபத்திற்குள்ளான நபர் ஒரு ஆணாக இருந்தால் அதற்கு ஆண்கள் அலுவலகம் சூரி (Mannebüro Zuri) பொறுப்பானது. ஆபத்தினை விளைவிக்கும் பெண்களுடன் சிறை தொடர்பான அலுவலகம் சூரிச் II (Zürich II) இன் பணியாளர் தொடர்பை ஏற்படுத்துவார். ஆபத்தினை விளைவித்த நபர் சிறுவர்கள் அல்லது இளம்வயதினராக இருப்பின் பிரத்தியேக நிபுணர்கள் அவர்களுடன் அல்லது பெற்றோர்களுடன் தொடர்பு கொள்வர்.

## 28. ஆபத்தினை விளைவிக்கும் ஒரு நபர் எதிர்காலத்தில் வன்முறையை தவிர்த்துக்கொள்வதற்கு என்னசெய்யவேண்டும்?

சிறை தொடர்பான அலுவலகம் சூரிச் II (Zürich II) வன்முறையற்ற துணை(PoG)எனும் கற்கைநெறிச் செயற் திட்டம் உருவாக்கியுள்ளார்கள். இதனுள் வன்முறைகள் தோற்றத்திற்கான காரணங்களை குழுக்களாக இணைந்து கலந்துரையாடுவதற்கு ஆண்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும், அத்துடன் வன்முறையற்று சேர்ந்துவாழ்வதற்கும் முரண்பாடுகளை சமாளிப்பதற்குமான வழிமுறைகளை கற்பிப்பார்கள். ஆண்கள் அலுவலகம் சூரி (Mannebüro Zuri) யிலும் பிரத்தியேக ஆலோசனைகளும் பயிற்சிக்குழுக்கள் போன்றனவும் வழங்கப்படும்.

ஆபத்தினை விளைவிக்கும் பெண்களுடன் சிறை தொடர்பான அலுவலகம் சூரிச் II (Zürich II) பிரத்தியேக கலந்துரையாடல் மேற்கொள்ளும்.

## 29. வெளியேற்றல் நடவடிக்கை காரணமாக குடும்பச்செலவுக்குத் தேவைப்படும் பணம் இல்லாதவிடத்து துன்புற்றவர்களால் என்ன செய்யமுடியும்.?

வெளியேற்றப்பட்ட நபரே குடும்பப்பராமரிப்புக்கான உத்தரவாதத்திற்கு கடமைப்பட்டவராயின், வெளியேற்றப்பட்ட காலத்திற்குள் தேவைப்படும் பணத்திற்கும் அவரே உத்தரவாதம். இல்லையெனில் சமூக சேவை உதவி அமைப்பினால் தற்காலிகமாக உதவி வழங்கப்படும். எனினும் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆலோசனை நிலையத்தின் பொறுப்பு வாய்ந்த நிபுணருடன் தொடர்புகொள்ளவும்.

## 30. பிள்ளைகளும் வீட்டில் வசிப்பார்களேயானால் என்ன நடக்கும்?

காவல்துறையினரால் பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு கட்டளையை பாதுகாவலர் அலுவலக அதிகாரிகளுக்கும் அனுப்பப்படும். பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு, பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கான விசேட நடவடிக்கை அவசியமா? என அவர்கள் ஆராய்வர். உதாரணமாக: பிள்ளைகளுக்கு ஓர் உதவியாளர். பிள்ளைகள் தீவிர ஆபத்தான நிலையோ அல்லது வழங்கப்பட்ட பராமரிப்பு அதிகாரம் உத்தரவாதமற்ற நிலையோ ஏற்படின், காவல்துறையினர் முன்னறிவித்தல் இன்றி அவசரநிலையில் தங்குமிடத்திற்கு கொண்டு சென்று அத்துடன் பாதுகாவலர் அலுவலர்களுக்கு முறையிடுவர். அவர்கள் பிள்ளைகளை பாதுகாப்பதற்கான உடனடி நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்வர்.

# பாதுகாப்பு நடவடிக்கை நீடிப்பதற்கான விண்ணப்பம்

## 31. பாதுகாப்பு நடவடிக்கையினை நீடிக்க முடியுமா?

ஆபத்திற்குள்ளான நபருக்கான பாதுகாப்பு 14 நாட்களுக்கு மேலாகவும் அவசியமாயின் தானாகவே செயற்படுதல் வேண்டும். அவள் பாதுகாப்பு நடவடிக்கை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கட்டளையின் பிரதி கிடைக்கப்பெற்ற 8 நாட்களுள் பாதுகாப்பு நடவடிக்கை நீடிப்பினை கோரலாம். இதை மூன்று மாதங்கள் வரையான நீடிப்பினை மேற்கொள்ளமுடியும்.

## 32. எவ்வாறு, எங்கே பாதுகாப்பு நடவடிக்கையின் நீடிப்பினை கோரமுடியும்?

ஆபத்திற்குள்ளான நபர், பாதுகாப்பு நடவடிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தடுப்புக்காவல் நீதிபதியிடம் தீர்ப்பையும் இணைத்து விண்ணப்பிக்கவும். அது எழுத்து வடிவிலும், எதனால் ஆபத்துகள் முன்னர் போன்று இப்போதும் உள்ளதென நம்பகத்தன்மையான காரணங்களை கொண்டிருத்தல் வேண்டும். ஆலோசனை நிலையங்கள் உதவியாக அமையலாம்.

## 33. எவ்வாறு தொடர்ச்சியான ஆபத்து உள்ளதென நம்பகத்தன்மையான வகையில் காட்டிக்கொள்ள முடியும்?

ஆபத்திற்குள்ளான நபருக்கான பாதுகாப்பு அவசியமாயின், பாதுகாப்பு நடவடிக்கையை நீடிப்பதற்கான கட்டளையிடப்படும். ஆதாரமாக உதாரணமாக: வைத்திய அல்லது பிரத்தியேக சிகிச்சைக்கான சான்றிதழ் செல்லுபடியாகும், இதில் மனவுளைச்சல் அல்லது உடல் உளைச்சல் ரீதியான தாக்கங்கள் உள்ளதென குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் நீடிப்பின் அவசியத்தை வலியுறுத்திக்காட்டவும்.

குடிசார் வழக்குமூலமாக திருமணத்திற்கு, பிரிந்து செல்வதற்கு, விவாகரத்துக்கு அல்லது சுயபாதுகாப்பிற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகக்கு விண்ணப்பித்திருப்பின் தொடர்ச்சியான ஆபத்து உள்ளதென கருதப்படும். ஆபத்தினை விளைவிக்கும் நபர் பாதுகாப்பு நடவடிக்கையை பின்பற்றாத பட்சத்திலும் தொடர்ச்சியான ஆபத்து உள்ளதென கருதப்படும்.

## 34. நீடிப்பிற்கான செயல்முறைகள் நீதிமன்றத்தில் எவ்வாறு நடைபெறும்?

ஆபத்தினை விளைவிக்கும் நபரை தடுப்புக்காவல் நீதிபதி விசாரணை செய்வார். அதன்பின் பாதுகாப்பு நடவடிக்கை தேவைப்படின், எவ்வளவு காலம் நீடிக்கப்படும் என்பதை உறுதியாக முடிவு செய்வார்.

ஆபத்தினை விளைவிக்கும் நபர் நீதிமன்றிற்கு சமூகமளிக்காவிடின், நீதிமன்றம் ஆவணங்களின் அடிப்படையில் தற்காலிக முடிவினை எடுப்பதுடன், தீர்ப்பினை இரு தரப்பினருக்கும் அறியத்தருவார்கள். 5 நாட்களுள் எதிர் மனு தாக்கல் செய்யாத பட்சத்தில் இந்த முடிவு உறுதியானதாகும்.

## 35. நிலைமைகளில் மாற்றம் ஏற்படின்?

தடுப்புக்காவல் நீதிபதியினால் பாதுகாப்பு நடவடிக்கை வழங்கப்பட்ட காலப்பகுதியினுள் நிலைமைகளில் மாற்றம் ஏற்படின் தடுப்புக்காவல் நீதிபதியினிடம் நீக்குவதற்கு, நீடிப்பதற்கு அல்லது மாற்றத்திற்கு கோரலாம், உதாரணமாக: வெளியேற்றலுடன் மேலதிகமாக தேவைப்படின் தொடர்புகொள்ளல் தடை.

## 36. தடுப்புக்காவல் நீதிபதியின் செயற்பாடுகளுக்கான செலவு என்ன?

எதிர்மனு அல்லது பாதுகாப்பு நடவடிக்கை நீடிப்புமனு செய்வதற்கான நடைமுறைச்செலவுகள் ஏறத்தாள 300.- பிறாங்குகள் ஆகும். எதிர்மனுவையும் நீடிப்புமனுவையும் இணைத்து மேற்கொள்ளும்போது செலவானது சற்று அதிகமாக இருக்கும். தோல்வியுற்ற தரப்பினரே இச்செலவினை ஏற்கவேண்டும். இதைத்தவிர எதிர்தரப்பினரின் நடைமுறைச்செலவுகளையும் வழங்கறிஞருக்கானதையும் உள்ளடக்கி சில நூறு பிறாங்குகள்வரை ஆகலாம்.

ஒரு நபரோ, குடும்பமோ குறைந்தளவு வருமானத்தைக் கொண்டிருப்பின், வழக்குச்செலவுகளை கட்டாயமாக ஏற்கவேண்டியதில்லை. ஆனால் குறிபிட்ட நபர் பொருளாதார நிலையில் முன்னேற்றமடையும்போது செலுத்தவேண்டும்.

# தடுப்புக்காவல்

## 37. காவல்துறையினர் ஆபத்தினை விளைவிக்கும் நபரை கைது செய்யமுடியுமா?

ஆம். இந்த நபர் ஆபத்திற்குள்ளான நபருக்கு கடுமையாகவும் நேரடியாகவும் ஆபத்தினை விளைவிப்பாராக இருந்தால், இந்த ஆபத்து சூழலை வேறுமுறையில் தடுக்கமுடியாத பட்சத்தில், அல்லது பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதை உறுதிசெய்வதற்கு தேவையாயின் காவல்துறையினர் ஒருநபரை 24 மணித்தியாலங்களுக்கு தடுத்து வைத்திருக்க முடியும்.

காவல்துறையினர் தடுப்புக்காவலை கூடியது 4 நாட்கள் நீடிப்பதற்கு தடுப்புக்காவல் நீதிபதியிடம் விண்ணப்பிக்கலாம்.

## 38. காவல்துறையினர் தடுப்புக்காவலையும் அத்துடன் பாதுகாப்பு நடவடிக்கையையும் ஒன்றாக மேற்கொள்ளமுடியுமா?

ஆம். வெளியேறுதல், தொடர்புகொள்ளலும் அல்லது உட்பிரவேசித்தலும் தடை என்பன மேற்கொள்ளப்பட்ட நாளில் இருந்து எப்போதும் 14 நாட்களுக்கு செல்லுபடியாகும். தடுப்புக்காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்டாலும் அல்லது விசாரணைத் தடுப்புக்காவலுக்கு கட்டளையிடப்பட்டிருப்பினும் அல்லது சிகிச்சைநிலையத்திலிருந்து அல்லது மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பினும்.

குடும்ப வன்முறைபற்றிய மேலதிக தகவல்களை www.ist.zh.ch இல் பெற்றுக்கொள்ளலாம்

# காவல்துறை-அவசர அழைப்பு: 117

## பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கான ஆலோசனை நிலையங்கள்

*பெண்களுக்கு*

bif திருமணத்திலும் துணையிலும் வன்முறைக்கு எதிரான பெண்களுக்கான ஆலோசனை, தகவல் நிலையம். தொ.பே.: 044 278 99 99, www.bif-frauenberatung.ch

பெண்கள் அவசர அழைப்பு, வன்முறைக்கு உள்ளான பெண்களுக்கான ஆலோசனை நிலையம் Winterthur தொ.பே.: 052 213 61 61, www.frauennottelefon.ch

பெண்கள் அவசர அழைப்பு ஆலோசனை நிலையம் - பாலியல் வன்முறைக்கு எதிராக Zürich (முக்கியமாக பாலியல் வன்முறைக்கு) தொ.பே.: 044 291 46 46, www.frauenberatung.ch

*ஆண்களுக்கும் இளைஞர்களுக்கும்*

பொதுவாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிக்கான - ஆலோசனை நிலையம்
தொ.பே.: 044 299 40 50, www.ohzh.ch

## ஆபத்தினை விளைவிப்பவர்களுக்கான ஆலோசனை நிலையம்.

*ஆண்களுக்கு*

mannebüro züri (ஆண்கள் அலுவலகம் சூரி) தொ.பே.: 044 242 08 88, www.mannebuero.ch

*பெண்களுக்கு*

Bewährungsdienst II, (சிறை தொடர்பான அலுவலகம் II) தொ.பே.: 043 259 83 12, www.justizvollzug.zh.ch

## மேலதிக ஆலோசனை நிலையங்கள்

FIZ பெண்கள் தகவல் நிலையம், ஆபிரிக்கா, ஆசிய, லத்தீன் அமெரிக்கா, கிழக்கு ஐரோப்பிய பெண்களுக்கு தொ.பே.: 044 240 44 22, www.fiz-info.ch

Infodona – குடியேற்றவாசிகளுக்கான ஆலோசனை நிலையம், தொ.பே.: 044 271 35 00, www.stadt-zuerich.ch/infodona

ஆலோசனை நிலையம்: மகளீர் பாதுகாப்பு இல்லம் Zürich Oberland,
தொ.பே.: 044 994 40 94
மின்னஞ்சல் மூலமான ஆலோசனைகள். வழங்கப்படும்: info@frauenhau-zo.ch

---

மகளீர் பாதுகாப்பு இல்லங்கள் (ஆபத்துக்குள்ளான பெண்களுக்கான அவசர தங்குமிடங்கள்)

மகளீர் பாதுகாப்பு இல்லம் Violetta ஆபத்தை எதிர்நோக்கும் குடியேற்றவாசிகளுக்கு, தொ.பே.: 044 291 08 70, www.frauenhaus-violetta.ch

மகளீர் பாதுகாப்பு இல்லம் சூரிச், தொ.பே.: 044 350 04 04, www.frauenhaus-zuerich.ch

மகளீர் பாதுகாப்பு இல்லம் விண்டர்தூர், தொ.பே.: 052 213 08 78

மகளீர் பாதுகாப்பு இல்லம் சூரிச் ஓபர்லாண்ட்,
தொ.பே.: 044 994 40 94, www.frauenhaus-zo.ch